

# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

26.08.2024

## 35. கர்த்தர் ஆயத்தம் செய்த பாதையின் 'முடிவு' நலமே!

**வா**ழ்க்கை, எக்காரணத்தைக் கொண்டும் "சுமக்க முடியாத பாரச்சுமை" என ஒரு கிறிஸ்தவன் மனம்பதறி கூறவே மாட்டான்! ஏனெனில் 'நம் திராணிக்கு மிஞ்சி' வாழ்வின் சுமை நம்மை நசித்துப்போட, தேவன் இடங்கொடார்! என, 1கொரிந்தியர் 10:13 வசனத்தின் மூலமாய் தேவன் நமக்கு அறிவித்திருக்கிறார்!

'இப்போது' உங்களுக்கு சுமையாகத் தோன்றும் பழுவைக்கூட, தேவன்மேல் உருட்டித் தள்ளிவிட்டு, அவரோடு நாம் சமாதானமாய் ஜீவித்திடவே தேவன் விரும்புகிறார் (1பேதுரு5:7). ஆகவே, அவர் நமக்காக எந்தப் பாதையை ஆயத்தம் பண்ணியுள்ளாரோ, அந்தப் பாதையில் நடந்து, அவருடன் சம்பாஷித்து 'அவரிலேயே' நாம் பூரண நம்பிக்கை வைத்திடக் கடவோம்! நாம் அப்படிச் செய்திடக்கூடுமானால் "இறுதியில்" தேவனுடைய தயவுள்ள கரத்தின் செயல்களைக் கண்டு, நன்றியோடு அவரை நிச்சயமாய் துதித்திடுவோம்!

– ரத்னம்